





# கிறிஸ்து: அன்பின் கவிதை





அ.அல்போன்ஸ்
திருச்சி

அன்பின் மடல்

# கிறிஸ்து
# அன்பின் கவிதை

### அ. அல்போன்ஸ் திருச்சி

நற்செய்திகளின் மையமும் சாரமும் அன்பு ஆகும்."கடவுள் அன்பாய் இருக்கிறார்" என்று (1 யோவான் 4:8) அறிவிக்கிறது; 'ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்' என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோவான்13:34) நாம் செய்யும் அன்பு போதுமானதா?

நாம் எவ்வாறு அன்பு செய்ய வேண்டும்? இயேசு கிறிஸ்து ஒரு இலக்கணத்தை வெகுதெளிவாகக் கூறுகிறார். இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து "கிறிஸ்துவுடைய அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று உணர்ந்து, அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்துகொள்ளும் ஆற்றல் பெறுவீர்களாக!"(எபேசி3:19) அந்த அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் எது? அவரே சொல்லுகிறார்

"உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் கடவுளை நேசி" (மத்22:37).
அற்புதமான ஒரு வரி. அழகான மூன்று வார்த்தைகள்
முழு இதயத்தோடும்
முழு உள்ளத்தோடும்
முழு மனத்தோடும்.

இதயம், உள்ளம், மனது ஆகிய நிலைகளிலிருந்து முழுமையாக நேசிக்கச் சொல்கிறார். இங்குக் கூறப்படும் இதயம், உள்ளம், மனம் என்ற மூன்று சொற்களும் மனிதனின் முழு ஆளுமையையும் குறிக்கின்றன. உள் வாழ்க்கையின் வேறுபட்ட பரிமாணங்களைச் சுட்டிக்காட்டுகின்றன அவன் தனது உணர்ச்சி,

உறவு, உயிர் அனைத்தையும் கடவுளை நோக்கிச் செலுத்த வேண்டும் என்பதே இந்தக் கட்டளையின் தெய்வீக அர்த்தமாகும்.

பழைய ஏற்பாட்டிலும்", "உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக! (இணைச் சட்டம் 6:5). என்பதை பார்க்கிறோம்.

இவ்வாறு இயேசு கூறும்போது, அன்பு என்பது ஒரு உணர்ச்சி மட்டும் அல்ல என்று காட்டுகிறார். அது மனிதனின் முழு ஆளுமையையும் கடவுளை நோக்கித் திருப்பும் வாழ்க்கை நிலையாகும்.

**இதயத்தோடு நேசிப்பது** அன்பின் உணர்வை வெளிப்படுத்துகிறது; **உள்ளத்தோடு நேசிப்பது** கடவுளுடன் வாழும் உறவைக் காட்டுகிறது; **மனத்தோடு நேசிப்பது** கடவுளை அறிந்து புரிந்து அவருடைய சித்தத்தை ஏற்றுக்கொள்ளும் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது.

### 1. இதயம்

அது மனிதனின் உணர்ச்சிகள், விருப்பங்கள், ஆசைகள், தீர்மானங்கள் உருவாகும் உள் மையமாகக் கருதப்படுகிறது. மனிதன் என்ன விரும்புகிறான், எதை நேசிக்கிறான், எந்த வழியைத் தேர்ந்தெடுக்கிறான் என்பதெல்லாம் இதயத்திலிருந்தே வருகிறது. "விழிப்பாயிருந்து உன் இதயத்தைக் காவல் செய்" (நீதிமொழிகள் 4:23) ஏனெனில் வாழ்க்கையின் ஊற்றுகள் அதிலிருந்து புறப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

### 2. உள்ளம் / ஆன்மா (Soul — உள்ளம்)

**உள்ளம்** அல்லது **ஆன்மா** என்பது மனிதனின் உயிரின் ஆழமான அடையாளத்தைக் குறிக்கிறது. "மனித உள்ளத்திலிருந்தே களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம் ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன"(மாற்கு 7:22)

“உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்.” (மத்6:21) என்று கூறினார் இயேசு.
“உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக” என்று கூறப்படுகிறது. (ரோம12:2)
மரியாள் “ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது.” (லூக் 1:47) என்று பாடுகிறாள். இது மனித உள்ளத்தின் அளவற்ற மதிப்பைக் காட்டுகிறது.

## 3. மனம்

**மனம்** என்பது மனிதனின் **சிந்தனை, அறிவு, புரிதல், தீர்மான திறன்** ஆகியவற்றின் மையமாகும். “உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் இருத்துங்கள்”. (பிலி 4:8)
இதயம், உள்ளம், மனம் என்ற மூன்று கூறுகளும் சேர்ந்து மனிதனின் முழு வாழ்க்கையை குறிக்கின்றன.

- **இதயம்** — அன்பு, உணர்ச்சி, விருப்பம்
- **உள்ளம்** — சிந்தனை, அறிவு, புரிதல், முழு அர்ப்பணிப்பு
- **மனம்** — உயிரின் ஆழமான அடையாளம்

நற்செய்திகளில் சில நிகழ்வுகள் இந்த மூன்று பரிமாணங்களும் (இதயம்—உள்ளம்—மனம்) ஒன்றாக வெளிப்படுவதை தெளிவாகக் காட்டுகின்றன. அவற்றில் சில முக்கிய காட்சிகளைப் பார்ப்போம்.

## 4. பாவியான பெண்ணின் அன்பு.

ஒரு பாவியான பெண், “நறுமணத் தைலம் கொண்ட படிகச் சிமிழைக் கொண்டு வந்தார். இயேசுவுக்குப் பின்னால் கால்மாட்டில் வந்து அவர் அழுதுகொண்டே நின்றார்; அவருடைய காலடிகளைத் தம் கண்ணீரால் நனைத்து, தம் கூந்தலால் துடைத்து, தொடர்ந்து முத்தமிட்டு அக்காலடிகளில் நறுமணத் தைலம் பூசினார்”. (லூக்7:37—38)

லூக்காசின் அழாகான வரிகளை மெதுவாகப் படிப்போம்

1. காலடிகளைத் தம் கண்ணீரால் நனைத்து,
2. கூந்தலால் துடைத்து
3. முத்தமிட்டு
4. நறுமணத் தைலம் பூசினார்



இந்தச் செயல் அன்பின் மிக ஆழமான வெளிப்பாடாக இருக்கிறது. இந்தச் சம்பவம் "முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் கடவுளை நேசி" என்ற கட்டளையின் உயிருள்ள எடுத்துக்காட்டாகக் காணப்படுகிறது.

முதலில் இந்த நிகழ்வில் இதயத்தோடு நேசித்தல் வெளிப்படுகிறது. அந்தப் பெண் இயேசுவின் முன்னிலையில் நின்றபோது அவள் இதயம் முழுவதும் உருகியது. அவள் வார்த்தைகளால் பேசவில்லை; ஆனால் அவளுடைய கண்ணீர் அவளுடைய மனந்திரும்பலையும் அன்பையும் வெளிப்படுத்தியது. அவள் இயேசுவின் காலடிகளை கண்ணீரால் நனைத்தது அவளுடைய இதயத்தின் உண்மையான உணர்வைக் காட்டுகிறது. மனிதன் தனது பாவத்தையும் கடவுளின் இரக்கத்தையும் உணரும்போது இதயம் இவ்வாறே உருகுகிறது. அதனால் இந்தக் கண்ணீர் இதயத்தின் அன்பும் மனந்திரும்பலும் ஆகிறது.

இரண்டாவது, இச்சம்பவம் உள்ளத்தோடு நேசித்தல் என்பதையும் வெளிப்படுத்துகிறது. அந்தப் பெண் தனது கூந்தலால் இயேசுவின் கால்களைத் துடைத்தாள். ஒரு பெண்ணின் கூந்தல் அவளுடைய மரியாதையும் கௌரவமும் எனக் கருதப்பட்ட காலத்தில், அவள் அதைத் தாழ்மையுடன் இயேசுவின் சேவைக்குப் பயன்படுத்தினாள். இது ஒரு சாதாரண செயல் அல்ல; அது முழு உள்ளத்தின் அர்ப்பணிப்பு. அவள் தனது வாழ்க்கையையும் அடையாளத்தையும் இயேசுவின் முன்னிலையில் ஒப்படைத்தாள். இங்கே உள்ளம்

கடவுளுடன் ஒரு உறவாக இணைகிறது. அவள் இனி தூரத்தில் நிற்கும் பாவி அல்ல; இயேசுவின் காலடியில் உறவைத் தேடும் மனிதர்.

மூன்றாவது, இந்த நிகழ்வு மனத்தோடு நேசித்தல் என்பதையும் காட்டுகிறது. அந்தப் பெண் இயேசுவின் கால்களை முத்தமிட்டு, நறுமணத் தைலம் பூசினாள். இதன் மூலம் அவள் இயேசுவின் மகத்துவத்தை உணர்ந்து அவரை மதித்தாள். அங்கே இருந்த பரிசேயர்கள் அவளைக் குற்றவாளியாகப் பார்த்தபோதும், அவள் இயேசுவில் இரட்சகரைக் கண்டாள். இந்தச் செயல் அவளுடைய உள்ளார்ந்த விசுவாசத்தின் அறிவை வெளிப்படுத்துகிறது. அவள் மனம் இயேசுவின் அருளை புரிந்து அவரை மதிப்புடன் ஏற்றுக்கொண்டது.

இதனால் இந்த ஒரு நிகழ்விலேயே மூன்று ஆழங்களும் ஒன்றாகக் காணப்படுகிறது:

கண்ணீர் — இதயத்தின் அன்பு,
கூந்தலால் துடைத்தல் — உள்ளத்தின் அர்ப்பணம்,
முத்தமும் நறுமணத் தைலமும் — மனத்தின் விசுவாசம்.

அதனால் அந்தப் பெண்ணின் செயல் இயேசு கூறிய பெரிய கட்டளையின் உயிருள்ள வடிவமாகிறது: மனிதன் கடவுளை முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் நேசிக்கும்போது தான் உண்மையான அன்பு நிறைவேறுகிறது.



### 5. ஊதாரி மகனிடம் தந்தை காட்டிய அன்பு

"ஊதாரி மகன் புறப்பட்டுத் தம் தந்தையிடம் வந்தார். தொலையில் வந்துகொண்டிருந்தபோதே அவர் தந்தை அவரைக் கண்டு, பரிவு கொண்டு, ஓடிப்போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார்.

மகனோ அவரிடம், 'அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம்

செய்தேன்; இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்' என்றார்.தந்தை தம் பணியாளரை நோக்கி, 'முதல்தரமான ஆடையைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள்; இவனுடைய கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள்; கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள்; நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம். (லூக்15:20—24)

தந்தையின் அன்பும் இரக்கமும் எவ்வளவு ஆழமானது என்பதை வெளிப்படுத்துகிறது. லூக்காசின் நற்செய்தியை மறு வாசிப்பு செய்வோம்.

மகன் திரும்பி வரும்போது, தந்தை அவனை

1. தூரத்திலேயே கண்டு, பரிவு கொண்டு
2. ஓடிப்போய்க் கட்டித் தழுவி
3. முத்தமிடுகிறார்,
4. சிறந்த ஆடை, மோதிரம், மிதியடி அணிவித்து,
5. விருந்து கொண்டாடுகிறார்.

இந்த நிகழ்வை "**முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் கடவுளை நேசி**" என்ற அன்பின் இலக்கண வெளிச்சத்தில் பார்க்கலாம்.

முதலில் இந்த நிகழ்வில் **இதயத்தோடு நேசித்தல்** வெளிப்படுகிறது. மகன் தொலைவில் வந்துகொண்டிருந்தபோது தந்தை அவனைக் கண்டு பரிவு கொண்டார். இந்தப் பரிவு தந்தையின் இதயத்தின் அன்பை வெளிப்படுத்துகிறது. தந்தை அவனைக் குற்றவாளியாகப் பார்க்கவில்லை; தனது மகனாகவே கண்டார். ஓடிப்போய் அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்டது இதயத்தின் ஆழமான அன்பின் வெளிப்பாடு. கடவுளின் இதயமும் இவ்வாறே மனிதனை நோக்கி இரக்கத்தால் நிரம்பியுள்ளது.

இரண்டாவது, இச்சம்பவம் **உள்ளத்தோடு நேசித்தல்** என்பதையும் காட்டுகிறது. மகன் தந்தையிடம் வந்து, "அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்; இனி உமது மகன் எனப்படத் தகுதியற்றவன்" என்று ஒப்புக்கொள்கிறான். இது அவன் உள்ளத்தின் உண்மையான மனந்திரும்பலை வெளிப்படுத்துகிறது.

அவன் தன் வாழ்க்கையை முழுவதும் தந்தையின் கரங்களில் ஒப்படைக்கிறான். இங்கே உள்ளம் உறவுக்காக ஏங்குகிறது. தந்தையும் அவனை மீண்டும் மகனாக ஏற்றுக்கொண்டு அந்த உறவை மீட்டெடுக்கிறார்.

மூன்றாவது, இந்த நிகழ்வு **மனத்தோடு நேசித்தல்** என்பதையும் வெளிப்படுத்துகிறது. தந்தை தனது பணியாளர்களை நோக்கி, "முதல்தரமான ஆடையைக் கொண்டு வந்து உடுத்துங்கள்; கைக்கு மோதிரமும் காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள்" என்று கூறுகிறார். இது வெறும் இரக்கம் அல்ல; அது மகனின் அடையாளத்தை மீண்டும் நிலைநிறுத்தும் தீர்மானம். தந்தை மனதில் அவனை முழுமையாக ஏற்றுக்கொண்டார். மேலும் "என் மகன் இறந்துபோயிருந்தான்; மீண்டும் உயிர் பெற்று வந்தான்" என்று அறிவித்தார். இந்த அறிவிப்பு அன்பின் ஆழமான புரிதலைக் காட்டுகிறது.

அதனால் இந்த உவமையில் மூன்று ஆழங்களும் ஒன்றாக வெளிப்படுகின்றன:
**தந்தையின் பரிவு மற்றும் தழுவல் — இதயத்தின் அன்பு,**
**மகனின் மனந்திரும்பல் — உள்ளத்தின் உறவு,**
**மீண்டும் மகனாக ஏற்றுக்கொண்ட தீர்மானம் — மனத்தின் புரிதல்.**

இதன் மூலம் இயேசு போதித்த பெரிய உண்மை வெளிப்படுகிறது: மனிதன் கடவுளை **முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும்** நேசிக்கும்போது, கடவுளும் மனிதனை முழுமையாகத் தனது அன்பில் ஏற்றுக்கொள்கிறார்.

### 6. நல்ல சமாரியனின் அன்பு

"அவ்வழியே பயணம் செய்துகொண்டிருந்த சமாரியர் ஒருவர் கள்வர்களால் அடித்துக் குற்றுயிராக இருந்தவரின் அருகில் வந்து அவரைக் கண்டபோது அவர்மீது பரிவு கொண்டார். அவர் அவரை அணுகி, காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்து,

அவற்றைக் கட்டி, தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவரைக் கவனித்துக் கொண்டார்.

மறுநாள் இருதெனாரியத்தை* எடுத்து, சாவடிப் பொறுப்பாளரிடம் கொடுத்து, 'இவரைக் கவனித்துக் கொள்ளும்; இதற்கு மேல் செலவானால் நான் திரும்பி வரும்போது உமக்குத் தருவேன்' என்றார். (லூக்10:33—35)

இந்த உவமையில் சமாரியன் காயமடைந்தவரை சாவடி எடுத்துச் சென்று காப்பாற்றினான் என்று சொன்னால் புரிந்து கொள்ளலாம்.

லூக்காசின் வரிகளைச் சிந்திப்போம். சமாரியன் அவனைக் காப்பாற்றும் செயல்கள் படிநிலையாக நடைபெறுகின்றன.

செயல் படிகள்

1. சமாரியன் அந்த மனிதனை கண்டான்.
2. அவனுடைய நிலையைப் பார்த்துப் பரிவு கொண்டான்.
3. அவனிடம் அணுகினான்.
4. அவன் காயங்களை எண்ணெய் மற்றும் திராட்சரசம் ஊற்றிக் கட்டினான்.
5. அவனைத் தன் கழுதையின் மேல் ஏற்றினான்.
6. அவனை விடுதிக்குக் கொண்டு சென்றான்.
7. அவனைப் பராமரித்தான்.
8. அடுத்த நாள் பணத்தை கொடுத்துத் தொடர்ந்து கவனிக்கச் சொன்னான்.



முதலில் இந்த நிகழ்வில் இதயத்தோடு அன்பு வெளிப்படுகிறது. சமாரியன் அந்த மனிதனை கண்டான்; நிலையைப் பார்த்து இரக்கம் கொண்டான். இதுவே இதயத்தின் உணர்வு. மற்றவர்கள் பார்த்தும் கடந்து சென்றார்கள்; ஆனால் சமாரியனின் இதயம் உருகியது. மனிதனின் துன்பத்தை உணர்ந்து

இரக்கம் கொள்வது இதயத்தின் அன்பின் முதல் வெளிப்பாடு. இங்கே அன்பு ஒரு உணர்வாகத் தொடங்குகிறது.

அடுத்து இந்த நிகழ்வில் உள்ளத்தோடு அன்பு வெளிப்படுகிறது. சமாரியன் காயமடைந்த மனிதனை அணுகினான்; அவன் காயங்களை எண்ணெய் மற்றும் திராட்சரசம் ஊற்றிக் கட்டினான்; அவனைத் தனது கழுதையின் மேல் ஏற்றினான். இவை எல்லாம் அவனுடைய உள்ளத்தின் அர்ப்பணிப்பை காட்டுகின்றன. அவன் தன் நேரத்தையும் சக்தியையும் செலவழித்து அந்த மனிதனை உதவினான். இங்கே அன்பு ஒரு உறவாக மாறுகிறது — அந்நியனாக இருந்த மனிதன் அவனுடைய பராமரிப்பிற்குள் வந்தான்.

மூன்றாவது, இந்த நிகழ்வில் மனத்தோடு அன்பு வெளிப்படுகிறது. சமாரியன் அந்த மனிதனை விடுதிக்குக் கொண்டு சென்றான், அவனைப் பராமரித்தான், அடுத்த நாள் பணம் கொடுத்துத் தொடர்ந்து கவனிக்கச் சொன்னான். இது வெறும் உணர்ச்சியால் செய்யப்பட்ட செயல் அல்ல; அது சிந்தனையுடனும் பொறுப்புடனும் செய்யப்பட்ட தீர்மானம். அவன் அந்த மனிதன் முழுமையாகக் குணமடைய வேண்டும் என்று எண்ணி முன்கூட்டியே ஏற்பாடு செய்தான். இங்கே மனம் அன்பை திட்டமிட்ட செயலில் மாற்றுகிறது.

அதனால் நல்ல சமாரியன் செய்த செயல்கள் மூன்று ஆழங்களையும் வெளிப்படுத்துகின்றன:

மனிதனின் துன்பத்தைக் கண்டு இரக்கம் கொண்டது — இதயத்தின் அன்பு,
அவனிடம் சென்று காயங்களைக் கட்டி உதவியது — உள்ளத்தின் அர்ப்பணம்,
அவனை விடுதியில் பராமரிக்க ஏற்பாடு செய்தது — மனத்தின் பொறுப்பான அன்பு.

## 7. இயேசு சீடர்களிடம் காட்டிய அன்பு

இயேசு பந்தியிலிருந்து எழுந்து, தம் மேலுடையைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார். பின்னர் ஒரு குவளையில் தண்ணீர் எடுத்துச் சீடர்களுடைய காலடிகளைக் கழுவி இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைக்கத் தொடங்கினார்.
(யோவான்13:4—5)

இயேசு சீடர்களின் கால்களைக் கழுவினார் என்று ஒரு வரியில் சொல்லியிருக்கலாமே. புரிந்துகொள்ள முடியும்.

யோவானின் நற்செய்தியில் இயேசுவின் அன்பும் தாழ்மையும் வெளிப்படும் மிக ஆழமான வரிகளைப் படிப்போம்.

1. பந்தியிலிருந்து எழுந்து,
2. மேலுடையைக் கழற்றி வைத்துவிட்டு,
3. ஒரு துண்டை எடுத்து, இடுப்பில் கட்டி,
4. ஒரு குவளையில் தண்ணீர் எடுத்து,
5. சீடர்களுடைய காலடிகளைக் கழுவி,
6. இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைத்தார்,

அந்த நாளில் கால்களைக் கழுவுவது அடிமைகளின் வேலை. பாவி பெண்ணொருத்தி இயேசுவின் கால்களைக் கழுவியது போல் இயேசு தன் சீடர்களின் கழுவுவதைப் பார்க்கிறோம். இயேசு எடுத்து வைத்த ஒவ்வொரு அசைவும், செயலும், உணர்ந்து, முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் இருப்பதை பார்க்கிறோம்.

இயேசு தம் சீடர்களுக்காக இந்தத் தாழ்மையான பணியைச் செய்தார். இந்த நிகழ்வு “முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் கடவுளை நேசி” என்ற கட்டளையின் ஆழமான விளக்கமாகப் பார்க்கலாம்.



முதலில் இந்த நிகழ்வில் இதயத்தோடு நேசித்தல் வெளிப்படுகிறது. இயேசு சீடர்களை மிகவும் நேசித்தார். அவர்களுடைய குறைகளையும் பலவீனங்களையும் (மறுதலித்து, காட்டிக்கொடுப்பது) அறிந்திருந்தபோதும், அவர்களை அன்புடன் ஏற்றுக்கொண்டார். பந்தியிலிருந்து எழுந்து மேலுடையைக் கழற்றி வைத்து விட்டு, துண்டை இடுப்பில் கட்டி அவர்களுடைய கால்களைக் கழுவத் தொடங்கியது. அவருடைய இதயத்தின் கருணையையும் அன்பையும் வெளிப்படுத்துகிறது. இந்தச் செயல் இதயத்தின் அன்பு வெளிப்பாடும், உள்ளத்தோடு நேசித்தல் என்பதையும் காட்டுகிறது.

பின்னர் அவர் சீடர்களிடம், "நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்" என்று கூறுகிறார் (யோவான்13:14—15). அவர் ஒரு தலைவராக மட்டுமில்லாமல், சேவை செய்யும் நண்பராகவும் ஆசிரியராகவும் தம்மை வெளிப்படுத்துகிறார். சீடர்களுடன் உள்ள உறவை ஆழப்படுத்தும் செயல் இதுவாகும். மனத்தோடு நேசித்தல் என்பதையும் வெளிப்படுத்துகிறது.
அதனால் இந்த நிகழ்வில் மூன்று ஆழங்களும் ஒன்றாகக் காணப்படுகிறது:

சீடர்களை நேசித்த இயேசுவின் கருணை - இதயத்தின் அன்பு, தாழ்மையுடன் சேவை செய்த செயல் - உள்ளத்தின் அர்ப்பணம், அன்பு சேவையாக வாழ வேண்டும் என்ற போதனை - மனத்தின் புரிதல்.

இதன் மூலம் இயேசு மனிதனை உண்மையான அன்பின் பாதையில் நடத்துகிறார். கடவுளை நேசிப்பது வார்த்தைகளால் மட்டும் அல்ல; அது இதயத்தில் உணர்ந்து, உள்ளத்தில் அர்ப்பணித்து, மனத்தில் புரிந்து செயல்படும் வாழ்க்கையாக மாற வேண்டும்.

## 8. இயேசு நம் மீது வைத்த அன்பு

இங்கே புனித பவுல் அடியார்களின் வரிகளை நினைவு கூறுவோம்.

“கடவுள் வடிவில் விளங்கிய அவர், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனித உருவில் தோன்றி சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்”.(பிலி6:8)

1. தம்மையே வெறுமையாக்கி,
2. அடிமையின் வடிவை ஏற்று
3. மனித உருவில் தோன்றி
4. சிலுவைச் சாவையே ஏற்கிறார்.

இந்த வரிகள் இதயம், உள்ளம், மற்றும் மனதின் முழு செயல்களைச் சுருக்கமாக வெளிப்படுத்துகிறது.

முதலில். கடவுள் வடிவில் இருந்த கிறிஸ்து மனிதனை இரட்சிக்கத் தம்மையே வெறுமையாக்கினார் இந்த வசனம் **இதயத்தோடு அன்பு** என்பதை காட்டுகிறது. இது ஒரு கடமை அல்ல; அது அன்பின் ஆழமான தீர்மானம். மனிதனை மீட்கும் கருணை அவருடைய இதயத்தில் இருந்தது. அதனால் அவர் வானத்தின் மகிமையை விட்டுவிட்டு மனித வாழ்க்கைக்குள் வந்தார். இந்தத் தெய்வீக கருணை தான் இதயத்தின் அன்பின் உச்சம்.

இரண்டாவது, கிறிஸ்து “அடிமையின் வடிவை ஏற்றார்” என்று பவுல் கூறுகிறார். இது முழு அர்ப்பணிப்பு இந்த வரி **உள்ளத்தின் அன்பை** என்பதை வெளிப்படுத்துகிறது. அவர் மனிதர்களோடு வாழ்ந்து, அவர்களுக்குச் சேவை செய்து, தாழ்மையுடன் நடந்து கொண்டார். சீடர்களின் கால்களைக் கழுவிய நிகழ்வு (யோவான் 13) இந்த உண்மையைத் தெளிவாகக் காட்டுகிறது. இங்கே அன்பு ஒரு உணர்ச்சி அல்ல; அது சேவையாக வெளிப்படும் வாழ்க்கை. அதாவது உள்ளம் முழுவதும் கடவுளின் சித்தத்திற்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

மூன்றாவது, கிறிஸ்து சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்தார். இந்த வரி **மனத்தோடு அன்பு** என்பதையும் காட்டுகிறது இது தந்தையின் சித்தத்தை முழுமையாகப் புரிந்து ஏற்றுக்கொண்ட விசுவாசத்தின் வெளிப்பாடு. அவர் சிலுவையைத் தவிர்க்கவில்லை; அது மனித இரட்சிப்பின் வழி என்பதை அறிந்தார். எனவே அவர் மனதார தந்தையின் திட்டத்திற்கு கீழ்ப்பட்டார்.

மனிதனை இரட்சிக்க வந்த கருணை — இதயத்தின் அன்பு,
அடிமையின் வடிவில் சேவை செய்த வாழ்க்கை —
உள்ளத்தின் அர்ப்பணம்,
சிலுவை வரை கீழ்ப்படியும் தீர்மானம் — மனத்தின் விசுவாசம்.

இங்கே உண்மையான அன்பின் பாதையைக் காட்டுகிறார்: அவர் நம்மை நேசித்தது போல் கடவுளை நேசிப்பது என்பது **இதயம் உணரும் அன்பாகவும், உள்ளம் அர்ப்பணிக்கும் வாழ்க்கையாகவும், மனம் கீழ்ப்படும் விசுவாசமாகவும்** மாறும் முழுமையான அர்ப்பணிப்பாகும்.

இதயம் உணர்வாகி,
உள்ளம் உறவாகி,
மனம் உயிராகி,
மனிதன் தன்னை முழுவதும் கடவுளுக்கே அர்ப்பணிக்க வேண்டும்.

## 9. முழுமையான அன்பு

இயேசு கூறிய “உன் கடவுளாகிய ஆண்டவரை முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் நேசி” என்ற கட்டளையில்
இதயத்தோடும், உள்ளத்தோடும், மனத்தோடும் என்று சொன்னாலே போதுமானது. இங்கு ஒவ்வொரு சொல்லுக்கும் முன்பாக “முழு” என்று வலியுறுத்துகிறது.

இந்த "முழு" என்ற சொல் ஒரு முக்கியமான இறையியல் அர்த்தத்தை முழுமையை, நிறைவை வெளிப்படுத்துகிறது. மனிதன் கடவுளைப் பகுதியளவில் அல்ல, முழுமையாக நேசிக்க வேண்டும் என்பதையே இது வலியுறுத்துகிறது

முழுமை, குறைவற்ற தன்மை, அளவில்லாத நிறைவு என்பதைக் குறிக்கிறது. கடவுள் அல்லது பரம்பொருள் முழுமையானவர்;

கடவுள் மனிதனுக்கு அருளும் கிருபை, ஆசீர்வாதம், இரக்கம் ஆகியவை குறைவாக அல்ல; நிறைவாக, முழுமையாக வழங்கப்படுகின்றன. இயேசு செய்த பல நிகழ்வுகள் இந்த முழுமையை, நிறைவை வெளிப்படுத்துகின்றன.

## 10. மலையில் அதிசயம்

முதலில், ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்த நிகழ்வு மிகத் தெளிவான உதாரணமாகும். ஐந்து அப்பமும் இரண்டு மீனும் மட்டுமே இருந்தாலும் இயேசு அதை ஆசீர்வதித்தார். "அனைவரும் வயிறார உண்டனர். எஞ்சிய துண்டுகளைப் பன்னிரண்டு கூடைகள் நிறைய எடுத்தனர்"(மத்14:19—20)

பின்னர் பாலைநிலத்தில், ஏழு அப்பங்களையும் சிறு மீன்கள் சிலவும் எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, பிட்டு, பரிமாறும்படி தம் சீடர்களிடம் கொடுக்க, அவர்களும் மக்களுக்கு அளித்தார்கள். அவர்கள் வயிறார உண்டார்கள். மீதியாய் இருந்த துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தார்கள். அங்கு இருந்தவர்கள் நாலாயிரம் பேர். (மாற்கு8;4)

இங்குக் கடவுளின் ஆசீர்வாதம் நிறைவானது மட்டுமல்ல; அது முழுமையானது, மேலும் அதிகமானது என்பதைக் காட்டுகிறது. கடவுளின் இரக்கம் மனித தேவையைத் தாண்டிப் பெருகுகிறது.

## 11. கடலில் அதிசயம்

"பெருந்திரளான மீன்களைப் பிடித்தார்கள். வலைகள் கிழியத் தொடங்கவே, மற்றப் படகிலிருந்த தங்கள் கூட்டாளிகளுக்குச் சைகைகாட்டித் துணைக்கு வருமாறு அழைத்தார்கள். அவர்களும் வந்து இரு படகுகளையும் மீன்களால் நிரப்பினார்கள். அவை மூழ்கும் நிலையிலிருந்தன.(லூக்5:6,7)

இரவு முழுவதும் மீன் பிடிக்க முடியாத நிலையில் இருந்த பேதுருவுக்கும் அவருடைய நண்பர்களுக்கும் இயேசு மீண்டும் வலை வீசச் சொன்னார். அவர்கள் வீசியபோது அவ்வளவு மீன்கள் கிடைத்ததால் வலை கிழியத் தொடங்கியது. மற்ற படகுகளையும் அழைத்து உதவி கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இங்குக் கடவுளின் ஆசீர்வாதம் "சிறிது" அல்ல; அது அளவில்லாத நிறைவு என்பதை காட்டுகிறது.

## 12 கானாவூரில் அதிசயம்

மூன்றாவது, கானா திருமணத்தில் தண்ணீர் திராட்சரசமாக மாறிய நிகழ்வு. இயேசு அவர்களிடம், "இத்தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள்" என்று கூறினார். அவர்கள் அவற்றை விளிம்புவரை நிரப்பினார்கள்.
(யோவான்2:6—10).

இங்கு "தண்ணீர் நிரப்பினார்கள்" என்று மட்டும் சொல்லாமல் "விளிம்புவரை நிரப்பினார்கள்" என்று சொல்லப்படுவது ஒரு முக்கியமான ஆன்மீக அர்த்தத்தை வெளிப்படுத்துகிறது.
முதலில், "விளிம்புவரை" என்பதன் அர்த்தம் அவர்கள் குடங்களை முழுமையாக நிரப்பினர். மனிதன் கடவுளின் வார்த்தையை முழுமையாக நிறைவேற்றும்போது தான் அதிசயம் நிகழ்கிறது என்பதை இது காட்டுகிறது. மனிதனின் முழு கீழ்ப்படிதல் கடவுளின் கிருபைக்கு இடம் கொடுக்கிறது.

நான்காவது, இயேசு தமது போதனையிலும் இந்த நிறைவு கருத்தை வெளிப்படுத்துகிறார். "நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" என்று கூறுகிறார் (யோவான் 10:10).

"கடவுளின் முழு நிறைவையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்களாக!" (எபேசி3:19) என்று சொல்லப்படுகிறது

இங்கு "நிறைவு" என்பது வெறும் பொருள் வளம் அல்ல; அது ஆன்மீக வாழ்வின் முழுமையை பூரணத்தன்மையை குறிப்பதாகும்.

"இவரது நிறைவிலிருந்து நாம் யாவரும் நிறைவாக அருள் பெற்றுள்ளோம். (யோவான்1:160) என்று சொல்லப்படுகிறது.
இது மனித வாழ்க்கையின் ஆன்மீக நிரப்புதலை குறிக்கிறது.

இயேசு கிறிஸ்து நமக்குச் செய்கின்ற ஒவ்வொரு செயல்களிலும் நிறைவாக, முழுமையாகச் செய்கின்றார் அதைப் போல் நாமும் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் கடவுளை நேசிப்போம்.

இதயம் கடவுளை உணர வேண்டும்;
உள்ளம் கடவுளுடன் வாழ வேண்டும்;
மனம் கடவுளைப் புரிந்து அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இந்த மூன்றும் ஒன்றாக இணையும்போது மனிதன் கடவுளோடு முழுமையான உறவை அடைகிறான். அப்போது மனிதனின் வாழ்க்கை ஒரு தியானமாக மாறுகிறது: வாழ்க்கை வெறும் வாழ்வாக இல்லாமல், கடவுளை நோக்கி உயர்ந்து செல்லும் ஒரு அன்பின் வழிபாடாக மாறுகிறது

**இதயம்** அன்பின் தீபமாக எரிகிறது,
**உள்ளம்** கடவுளின் இருப்பிடமாக ஆகிறது,
**மனம்** அவருடைய சித்தத்தை தேடும் ஒளியாக மாறுகிறது.

## 13. அன்பாலே நிறைவாகும் வாழ்வு

மனித வாழ்க்கையின் உண்மையான அழகு எதிலுள்ளது என்பதை வெளிப்படுத்தினார். மனிதன் அறிவாலும் செல்வத்தாலும் அதிகாரத்தாலும் உயர்ந்தவனாகத் தோன்றலாம்; ஆனால் அவை அனைத்தும் அன்பு இல்லாமல் இருந்தால் வாழ்க்கை வெறுமையாகிவிடும்.

இதயம் அன்பால் நிரம்பும்போது உணர்வுகள் தூய்மையடைகின்றன; உள்ளம் அன்பால் நிரம்பும்போது

மனிதன் தனது வாழ்க்கையையே அர்ப்பணிப்பாக மாற்றுகிறான்;

மனம் அன்பால் நிரம்பும்போது எண்ணங்களும் செயல்களும் ஒளியூட்டப்பட்டவையாக மாறுகின்றன.

இந்த மூன்றும் ஒன்றாக இணையும்போது மனித வாழ்வு ஒரு சாதாரண வாழ்க்கையாக இல்லாமல், தெய்வீக அர்த்தம் கொண்ட நிறைவான, அழகான வாழ்க்கையாக மாறுகிறது. அந்த அன்பு மனிதனை கடவுளோடு இணைக்கிறது, மனிதனை மனிதனோடு இணைக்கிறது, வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குகிறது.

கடவுளின் அன்பு மனித அறிவால் முழுமையாக அளக்க முடியாத அளவுக்கு அகன்றதும், மனித இதயம் முழுவதையும் நிரப்பும் அளவுக்கு ஆழ்ந்ததுமாக இருக்கிறது. இந்த அன்பை உணர்ந்து வாழ்வதே மனித வாழ்க்கையின் உண்மையான நிறைவு. மனிதன் தனது **முழு இதயம், முழு உள்ளம், முழு மனம்** கொண்டு கடவுளை நேசிக்கும்போது, அவன் வாழ்க்கை சாதாரணமானதிலிருந்து தெய்வீக அர்த்தமுள்ளதாய் மாறுகிறது. அப்போது அன்பு ஒரு உணர்வு மட்டுமல்ல; அது வாழ்க்கையின் ஒளியாகவும், வழிகாட்டும் சக்தியாகவும் மாறுகிறது. அந்த அன்பு மனிதனை கடவுளோடும் மனிதர்களோடும் இணைக்கிறது; வெறுப்பையும் பிரிவையும் அகற்றி சமாதானத்தையும் கருணையையும் உருவாக்குகிறது. ஆகவே, கடவுளின் அன்பின் **அகலத்தையும் ஆழத்தையும்** உணர்ந்து அதில் வாழும் வாழ்க்கையே மனிதனின் மிக அழகான மற்றும் பூரணமான வாழ்க்கையாகும்.